"பெரியார் அறிவுலகம் கோவைக்கு புதிய அடையாளமாக நிலைக்கும் !" என ஆசிரியர் கி. வீரமணி வாழ்த்து !

சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு !

சென்னை, அக் 21-

திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் உடல்நலம் குன்றியுள்ள செய்தி அறிந்து நேற்று கழகத் தலைவர் மு. க.ஸ்டாலின் அவர்கள், ஆசிரியர் இல்லம் சென்று பார்த்து நலம் விசாரித்தார்.

இச்சந்திப்பை அடுத்து வலைதளப் பதிவிட்ட கழகத் தலைவர் அவர்கள், "சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் வலைதளப் பதிவு வருமாறு:-

ஆசிரியர் அய்யா அவர்களுக்கு உடல்நிலை சரியில்லை என்று கேள்வியுற்றதும் நேரில் சந்தித்து நலம் விசாரித்தேன். அடிக்கடி தொலைதூரப் பயணங்கள் மேற்கொள்வதையும், ஓய்வில்லாமல் உழைப்பதையும் குறைத்துக் கொள்ள வேண்டுமென உரிமையோடு அவரிடம் கேட்டுக்கொண்டேன். "ஆக்ஸ்போர்டில் தந்தை பெரியாரின் படத்தைத் திறந்து வைத்து உலக அளவில் பெரியாரியத்தை நிலைநிறுத்தியது போன்றே, திராவிட மாடல் அரசால் உருவாக்கப்பட்டு தற்போது திறந்து வைக்கப்பட்டுள்ள பெரியார் அறிவுலகம் கோவைக்கே புதிய அடையாளமாக நிலைக்கும்" என நிறைவோடு வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். சமூகப் பிணி களையப் பெரியாரியத்தைத் தொடர்ந்து பரப்புவோம்!

இவ்வாறு அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பா.ஜ.க.வின் கார்பன் காப்பியாக செயல்படாமல் உடனே விடுதலை செய்வீர்

நா.த.க. வேட்பாளர் கைது; கடைந்தெடுத்த பாசிசம்!

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.21-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சி வேட்பாளர் கார்த்திகாவை கைது செய்திருப்பது கடைந்தெடுத்த பாசிசம் என்றும், 'ரீல்ஸ்' முதல மைச்சர், பா.ஜ.க.வின் கார்பன் காபியாக செயல்படாமல், அவரை உடனடியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது கண்டனப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

தாராபுரம் இடைத்தேர்தலில் போட்டியிட்ட நாம் தமிழர் கட்சியின் வேட்பாளர் சகோதரி கார்த்திகாவை இந்த CIRCUS அரசாங்கம் கைது செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறேன்.

தேர்தல் நேரத்தில் பதியப்பட்ட வழக்கின் அடிப்படையில், அரசியல் பழிவாங்கலோடும் த.வெ.க.வினரின் போதைப்பொருள் கடத்தல் செய்திகளை திசைத்திருப்பவும் இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.



அரசியலில் விமர்சனங்களும் ஜனநாயக ரீதியான போராட்டங்களும் தவிர்க்க முடியாதவை. அதற்காக எதிர்வரிசையில் உள்ள ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்ணை கைது செய்வது என்பது கடைந்தெடுத்த பாசிசம்.

இந்த ரீல்ஸ் முதலமைச்சர், பா.ஜ.கவின் CARBON COPYஆக செயல்படாமல், சகோதரி கார்த்திகாவை விடுவிக்கத் தேவையான நடவடிக்கையை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசியவரின் பதில் என்ன?

செஞ்சி சிறுமியை மீட்க த.வெ.க. அரசு உடனே நடவடிக்கை எடுக்க வேண்டும்!

துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. வலியுறுத்தல்!

சென்னை, அக்.21-

பெண்களுக்கு அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச்சரின் பதில் என்ன என்றும், செஞ்சி சிறுமியை மீட்க உடனே நடவடிக்கை எடுத்து, அது பற்றி அரசு உடனடியாக விளக்க வேண்டும் என்றும் தி.மு.க. துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி ராஜாத்தி கருணாநிதி எம்.பி. அவர்கள் வலியுறுத்தி உள்ளார்.

இது தொடர்பாக அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

பெருந்துறையில் காணாமல் போன செவிலியர், ஐந்து நாட்களுக்குப்பிறகு சடலமாகமீட்கப்பட்டுள்ளார். அவரைக் காணவில்லை என்று புகாரளிக்கச் சென்றபோது, அந்தப் பெண்ணையே இழிவுபடுத்திப் பேசி, நடவடிக்கை எடுக்காமல் காவல்துறை அலட்சியமாகச் செயல்பட்டதாக உறவினர்கள் குற்றம்சாட்டுகின்றனர்.



மறுபுறம், செஞ்சியில் ஏழு வயதுச் சிறுமி காணாமல் போய் ஒன்பது நாட்களாகியும், குழந்தை குறித்த எந்தத் தகவலும் கிடைக்காததால் பெற்றோர் செய்வதறியாது தவித்துக் கொண்டிருக்கின்றனர். ஒன்பது நாட்களாகியும் குழந்தையைக்கண்டுபிடிக்கமுடியவில்லை என்றால், காவல்துறையை வைத்துக்கொண்டு முதலமைச்சர் என்ன செய்துகொண்டிருக்கிறார்?

பெண்களுக்கு அண்ணனாகவும் அரணாகவும் இருப்பேன் என்று வசனம் பேசிய முதலமைச்சர் @TVKVIJAYHQ அவர்கள், இந்த குற்றச்சம்பவங்களுக்கு என்ன பதில் சொல்லப் போகிறார்?

பெருந்துறை வழக்கில் குற்றச்சாட்டுக்குள்ளான அதிகாரிகளை விசாரணையிலிருந்து நீக்கி, நேர்மையான அதிகாரிகளைக் கொண்டு விசாரணை நடத்த வேண்டும். செஞ்சிச் சிறுமியை மீட்பதற்கான தேடுதலைத் தீவிரப்படுத்தி, எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை அரசு உடனடியாக விளக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

கடும் மழையால் வெட்டவெளிச்சம்

தமிழ்நாடு மின்வாரியத்தின் மோசமான பராமரிப்பு பணிகள்!

தி டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளேடு குற்றச்சாட்டு!

சென்னை, அக். 21-

வடகிழக்குப் பருவமழையின் முதல் கனமழையானது, தமிழ்நாடு மின்சார விநியோகக் கழகத்தின் (TNPDCL) பராமரிப்புப் பணிகளை அம்பலப்படுத்தியுள்ளது என்று தி டைம்ஸ் ஆப் இந்தியா ஆங்கில நாளேடு தெரிவித்துள்ளது.

சனிக்கிழமை இரவு முதல் பல பகுதிகளில் மின்வெட்டு ஏற்பட்டது. நகரின் பரபரப்பான வர்த்தக மையங்களில் ஒன்றான கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தைக்கு, ஞாயிற்றுக்கிழமை மாலை வரை மின்சாரம் மீண்டும் வழங்கப்படவில்லை.

ஆயுத பூஜை கொண்டாட்டங்களுக்கு முன்னதாக, சனிக்கிழமை இரவு சுமார் 10 மணியளவில் பழச் சந்தைக்கான மின் விநியோகம் நிறுத்தப்பட்டதால் வியாபாரம் பாதிக்கப்பட்டது. பல கடைகளில் பேட்டரி பேக்கப் தீர்ந்து போனதால், பழங்களைச் சேமிப்பதும், விளக்குகள் அமைப்பதும் சிக்கலாகியது," என்று சென்னை கோயம்பேடு பழங்கள் கமிஷன் முகவர்கள் சங்கத்தின் தலைவர் எஸ். சீனிவாசன் கூறினார். பழச் சந்தையில் மட்டும் சுமார் 600 கடைகள் உள்ளன. மின் தடைக்குக் காரணமான சேதமடைந்த நிலத்தடி கேபிள் சரிசெய்யப்பட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இருப்பினும், சில நாட்களுக்கு முன்பு சந்தைக்கு சுமார் 11 மணி நேரம் மின் விநியோகம் நிறுத்தப்பட்டதாக வியாபாரிகள் புகார் தெரிவித்தனர். "சந்தை முதலில் அமைக்கப்பட்டபோதே நிலத்தடி கேபிள்கள் பதிக்கப்பட்டன, அவற்றை மாற்ற வேண்டும். ஆனால், செலவையார் ஏற்பது என்பது குறித்து சென்னை பெருநகர அபிவிருத்தி ஆணையத்திற்கும் (CMDA) தமிழ்நாடு பொதுத்துறை நிறுவனத்திற்கும் (TNPDCL) இடையே வாக்குவாதம் நடந்து வருகிறது," என்று மற்றொரு வியாபாரி கூறினார். சந்தை வளாகத்தின் தலைமை நிர்வாக அதிகாரி இந்துமதியிடம் கருத்து



Extended power cuts in city expose poor upkeep by TNPDCL

TIMES NEWS NETWORK

Chennai: The first heavy downpour of the northeast monsoon exposed poor maintenance work by Tamil Nadu Power Distribution Corporation (TNPDCL), as several areas across the city reported power cuts since Saturday night, some extending into Sunday.

Supply to Koyambedu wholesale market was not restored until Sunday evening, affecting business ahead of Ayudha Puja celebrations. "The underground power cables were laid when the market was set up and should be replaced. Chennai Metropolitan Development Authority and TNPDCL have been sparring over who should bear the cost," said a trader.

நிலத்தடி மின் கேபிளில் ஏற்பட்ட கோளாறு காரணமாக புளியந்தோப்புப் பகுதி மக்கள் ஞாயிற்றுக்கிழமை நாள் முழுவதும் மின் வெட்டைச் சந்தித்தனர். அதே சமயம், கோபாலபுரத்தில் மின்மாற்றியில் ஏற்பட்ட தீ விபத்தால் மின் தடை ஏற்பட்டது.டி. நகர் மற்றும் மாம்பலத்தில், மூன்று வெவ்வேறு கோளாறுகள் காரணமாக வீடுகளும் வணிக வளாகங்களும் இருளில் மூழ்கின. சனிக்கிழமை இரவு பெய்த கனமழையைக் காரணம் காட்டி, அண்ணா சாலைப் பகுதிக்கு டி.என்.பி.டி.சி.எல் மின் விநியோகத்தை நிறுத்தியது.

இதற்கிடையில், பல்வேறு பகுதிகளில் மேல்நிலை மின்கம்பிகள் அபாயகரமாகத் தாழ்வாகத் தொங்குவதாகவும், நிலத்தடி மின்கம்பிகளிலிருந்து புகை வருவதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். திருவேற்காட்டில், ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மேல்நிலை மின்கம்பிகள் மீது மரங்கள் விழுந்ததால் மின் வெட்டு ஏற்பட்டது. காலை 7.30 மணியளவில் மின் விநியோகம் மீண்டும் தொடங்கப்பட்டதாக தமிழ்நாடு மின் வாரிய மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

சனிக்கிழமை மாலை கனமழை தொடங்கியதை அடுத்து, மாதவரம் மற்றும் எண்ணூர் பகுதிகளில்தான் முதலில் மின்வெட்டு ஏற்பட்டது; ஞாயிற்றுக்கிழமை காலை மின் விநியோகம் மீண்டும் வழங்கப்பட்டது. ஞாயிற்றுக்கிழமையும் மின்வெட்டு தொடர்ந்ததால், நீலாங்கரை, புளியந்தோப்பு, மாங்காடு, திருவொற்றியூர், * திருவேற்காடு மற்றும் கொட்டிவாக்கம் உள்ளிட்ட பல பகுதிகள் பாதிக்கப்பட்டன.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

பாமாயில் டெண்டர்:

'Party Fund' பசி உச்சத்திற்குச் சென்று விட்டதா?

சென்னை உயர்நீதி மன்றத்திடம் குட்டு வாங்கிய த.வெ.க. அரசு!

சென்னை, அக். 21 -

பாமாயில் விநியோகிக்க நிறுவனங்களுக்கு டெண்டர் ஒதுக்கப்பட்டதில் மாபெரும் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளதாக, த.வெ.க. அரசின் டெண்டர் ஒதுக்கீட்டு உத்தரவுக்குச் சென்னை உயர் நீதிமன்றம் அதிரடியாக இடைக்காலத் தடை விதித்துள்ளது.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு ரேஷன் கடைகள் வாயிலாக மக்களுக்கு பாமாயில் விநியோகம் செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக ஒரு லிட்டர் வீதம் சுமார் 600 லட்சம் பாமாயில் பாக்கெட்டுகளை கொள்முதல் செய்ய தமிழ்நாடு கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை டெண்டர் அறிவிப்பை கடந்த ஜூன் 5ம் தேதி வெளியிட்டது. இதில் பல்வேறு நிறுவனங்கள் பங்கேற்றன.

கடந்த செப்.8ம் தேதி டெண்டர் திறக்கப் பட்டு, 4 நிறுவனங்க ளுக்கு பாமாயில் பாக்கெட்டுகள் விநியோகம் செய்யும் டெண்டர் ஒதுக்கப்பட்டது.

விதிமுறைகளைப் பின் பற்றி நேர்மையாக ஒரு டெண்டரைக் கூட விடத் துப்பில்லாமல் நீதிமன்றத்திடம் குட்டு வாங்கியது ஏன்? உங்களுக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் ரகசியமாகத் தீபாவளி 'பரிசு' (டெண்டர்) கொடுத்ததன் பின்னணியில் நடந்த 'Party Fund' டீலிங் என்ன?

ஒருபுறம் ஒரு யூனிட் மின் சாரத்தை ரூ. 35 என்ற விலையில் வாங்க டெண்டர் விட்டு மின்சாரத்தில்மெகாகொள்ளை, மறுபுறம் சாமானிய மக்கள் பயன்படுத்தும் ரேஷன் பாமாயிலிலும் கை வைக்கும் அளவுக்கு உங்களது 'Party Fund' பசி உச்சத்திற்குச் சென்று விட்டதா?

வங்கக்கடலில் வருகிற 23ஆம் தேதி

குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகிறது!

இந்திய வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, அக்.21-

வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தாய்லாந்து வளைகுடா மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி, நாளை காலை வடக்கு அந்தமான் கடல் பகுதிக்குள் நகரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. வளிமண்டல சுழற்சியின் தாக்கத்தால், தென்கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மத்திய கிழக்கு வங்கக்கடலில், வரும் 23ஆம் தேதி குறைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாக வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்தக் காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி, வடமேற்கு திசையில் நகர்ந்து மேலும் வலுப்பெற வாய்ப்புள்ள தாகவும் கூறப்பட்டுள்ளது. இதனால் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்யும் என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா.ஜி.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி.

எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ. முன்னிலையில்

சென்னை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் அறிவிப்பு!



சென்னை வடக்கு மாவட்டச் செயற்குழுக் கூட்டம் இன்று (21.10.2026 - புதன்கிழமை) காலை 10.00 மணிக்கு மாவட்ட அவைத் தலைவர் ஆர்.வெற்றிவீரன் தலைமையிலும், தலைமைக் கழக பிரதிநிதிகள் பேரா. ஜி.கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் எம்.பி., மற்றும் எஸ். ஆஸ்டின் எம்.எல்.ஏ., ஆகியோர் முன்னிலையிலும் இராயபுரம் அறிவகத்தில் நடைபெற உள்ளது.

நாள்	நேரம்	தொகுதி
21.10.2026	காலை 10.00 மணி	பெரம்பூர்
	காலை 10.30 மணி	இராயபுரம்
	காலை 11.00 மணி	ஆர்.கே.நகர்

இக்கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், அணிகளின் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள் - பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்டசெயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்று சிறப்பிக்க வேண்டுகிறேன்.

பொருள்: கழக ஆக்க பணிகள்

ஆர்.டி.சேகர்

பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

நாகையில் – 135 கிலோ உயரக

மெத்தபெட்டமைன் வைத்திருந்து கைதாகிய

த.வெ.க. நிர்வாகி பூபாலன் கூட்டாளிக்கு சம்மன்!

நாகை, அக். 21 -

நாகை மாவட்டம் - சிந்தாமணி கிராமத்தைச் சேர்ந்த த.வெ.க. நிர்வாகி பூபாலன், அவரது கூட்டாளிகள் சுகன், மணிகண்டன், சதீஷ் ஆகியோரை பல கோடி ரூபாய் மதிப்பிலான 135 கிலோ உயரக மெத்தபெட்டமைன் போதைப்பொருள் கடத்தியதாக ஒன்றிய வருவாய் புலனாய்வு பிரிவு போலீசார் கைது செய்தனர்.

கடல் மார்க்கமாக இலங்கைக்கு போதைப் பொருள் கடத்த நடந்ததாக சந்தேகிக்கப்படும் முயற்சி முறியடிக்கப்பட்டதாகவும், கைது செய்யப்பட்டுள்ள த.வெ.க. நிர்வாகி பூபாலன் உள்ளிட்ட 4 பேரும், என்.டி.பி.எஸ் சட்டத்தின் கீழ் கைது செய்யப் பட்டு நீதிமன்றக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நாகையில், த.வெ.க. நிர்வாகி பூபாலனிடமிருந்து 135 கிலோ மெத்தபெட்டமைன் போதைப்பொருள் பறிமுதல் செய்யப்பட்ட வழக்கில், அவரது கூட்டாளி ராஜ்குமாருக்கு மத்திய வருவாய் புலனாய்வு இயக்குநரகம் சம்மன் அனுப்பியுள்ளது.

இதற்கிடையே, இந்த வழக்கு குறித்து செய்தி வெளியிட்ட பத்திரிகையாளர்களுக்கு கொலை மிரட்டல் விடுத்த நாகை த.வெ.க. நகர நிர்வாகி பால்ராஜ் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

வலைதளங்களில் வலம் வருவது!



முதல்வருக்கு உளவுத்துறை சொன்ன தகவல்..!

தமிழகத்தில் ஆளும் கட்சியைச் சேர்ந்த பல மாவட்டச் செயலாளர்கள், கட்சி நிர்வாகிகளின் பின்னணி குறித்து ஆராயாமல் பொறுப்புகளை வழங்கியிருக்கிறார்கள். இதனால் திருவள்ளூர் உள்ளிட்ட பல பகுதிகளில், நாகையில் நடந்ததைப் போன்ற பல விஷயங்கள் வெளிவர வாய்ப்பிருப்பதாகவும், இப்போதே முதல்வர் கவனம் செலுத்தவில்லை என்றால் மிகப் பெரிய பின்விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்றும் எச்சரிக்கை விடுத்திருக்கிறதாம். பல மாவட்டச் செயலாளர்களின் பதவி பறிபோனாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை என்கிறார்கள்.